தமிழ்நாடுகால்நடைமருத்துவஅறிவியல் பல்கலைக்கழகம்
**TAMIL NADU VETERINARY AND ANIMAL SCIENCES UNIVERSITY**
விரிவாக்கக் கல்வி இயக்ககம்
Directorate of Extension Education

**எல் நினோ தாக்கத்திலிருந்து**
**கால்நடைகளைப் பாதுகாக்க வழிகாட்டி அறிக்கை**

***El Nino Impact Mitigation Advisory Bulletin***

**அன்பார்ந்த விவசாய பெருமக்களே, வணக்கம்!**

இப்போது நாம் சந்தித்து வரும் எல் நினோ (El Nino) பருவநிலை மாற்றத்தால், வெயில் கடுமையாக வாட்டுவதோடு, கடுமையான தீவனத் தட்டுப்பாடும் குடிநீர்த் தட்டுப்பாடும் ஏற்படுகின்றன. இந்தச் சூழலில், நமது கால்நடைகளைக் காப்பாற்ற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி தெரிந்துகொள்வோம்.

## தீவன மேலாண்மை

### 1. தீவனப் பாதுகாப்பு மற்றும் வறட்சியைத் தாங்கும் பயிர்கள்

எல் நினோ காலத்தில் பசும்புல் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, முன்கூட்டியே தீவனப் பாதுகாப்பில் கவனம் செலுத்த வேண்டும்

- உபரியாக இருக்கும் பசும்புற்களை **சைலேஜ் (Silage)** ஆகப் பதப்படுத்தி சேமிக்கலாம்.
- வைக்கோலுடன் **யூரியா மற்றும் மொலாசஸ்** சேர்த்து ஊட்டமேற்றுவதன் மூலம் (UMST) மாடுகளுக்குத் தேவையான புரதச்சத்தைக் கொடுக்கலாம்.
- வறட்சியைத் தாங்கும் பயிர்களான **கொளுக்கட்டைப் புல்** (Cenchrus ciliaris), **ஸ்டைலோ** மற்றும் காய்ந்த நிலங்களிலும் வளரக்கூடிய தீவனப் பயிர்களை வளர்க்கலாம்.
- **அசோலா** மற்றும் **ஹைட்ரோபோனிக்** தீவனங்களையும் மாற்றுத் தீவனமாகப் பயன்படுத்தலாம்.

### 2. கொட்டகை மேலாண்மை மற்றும் வெப்பத் தணிப்பு

அதிக வெப்பமும் ஈரப்பதமும் கால்நடைகளின் உடல் நலத்தையும், பால் உற்பத்தியையும் வெகுவாகப் பாதிக்கும்

- கறவை மாடுகளுக்கு உடல் வெப்பம் அதிகம் என்பதால் வெயில் கடுமையாகப் பாதிக்கும்.
- மாட்டுக் கொட்டகைகளைச் சுற்றி **நல்ல காற்றோட்டம்** இருக்க வேண்டும்.
- கூரையின் மீது வைக்கோல் அல்லது தென்னங்கீற்றுகளை வேய்ந்து, தேவைப்பட்டால் வெள்ளை வண்ணம் பூசி சூரிய வெப்பத்தைக் குறைக்கலாம்.
- அதிக வெயில் நேரங்களில் (மதியம் 12 முதல் 4 மணி வரை) கொட்டகையின் மீது தண்ணீர் தெளிப்பான்களைப் (Sprinklers) பயன்படுத்தி, மாடுகளுக்குக் குளிர்ச்சியான சூழலை உருவாக்கலாம்.

### 3. நீர் மேலாண்மை மற்றும் நீரேற்றம்

- எல் நினோ காலத்தில் நிலத்தடி நீர் குறைந்துவிடும் என்பதால், நீரைச் சரியாகப் பராமரிக்க வேண்டும்
- அதிக வெப்பக் காலத்தில் **தண்ணீர் தேவை இருமடங்காக** அதிகரிக்கும்
- கால்நடைகளுக்கு எப்போதுமே சுத்தமான, குளிர்ந்த குடிநீர் தாராளமாகக் கிடைக்கச் செய்ய வேண்டும்
- குடிநீரிலோ அல்லது தீவனத்திலோ **எலக்ட்ரோலைட்டுகள்** மற்றும் **வைட்டமின் C வைட்டமின் மற்றும் E** கலவைகளைக் கலந்து கொடுப்பது கால்நடைகளின் உடல் சோர்வைத் தடுக்கும்.

### 4. தீவன ஊட்டம் மற்றும் முறையான நேரக் கட்டுப்பாடு

வெப்பம் காரணமாக கால்நடைகள் குறைவான அளவே தீவனத்தை உட்கொள்ளும்:

- **குளிர்ந்த நேரங்களில் தீவனம்:** காலை வேளையிலும் அதாவது 7 மணிக்கு முன் மற்றும் மாலை வெயில் தணிந்த பின்னரும் அதாவது 6 மணிக்கு மேல் தீவனங்களை வழங்கலாம்.

- குறைந்த அளவு தீவனம் சாப்பிட்டாலும் தேவையான சத்துக்கள் கிடைக்க, அடர்தீவனங்களுடன் **தாது உப்புக்கலவையை** கண்டிப்பாகச் சேர்க்க வேண்டும்.

- அஜீரணத்தைத் தவிர்க்க **சோடியம் பைகார்பனேட்** போன்ற மாவுச்சத்து செய்யும் பொருட்களை பயன்படுத்தலாம்.

### 5. மாட்டுப் பண்ணை மற்றும் கறவை மாடுகளின் பாதுகாப்பு (கூடுதல் சிறப்பு)

- கறவை மாடுகளுக்கு உடல் வெப்பம் அதிகம் என்பதால் வெயில் கடுமையாகப் பாதிக்கும்.

- **நிழல் வசதி**, மின்விசிறி மற்றும் **குளிர்ந்த நீர்த்** தொட்டி வசதிகளைச் செய்து தருவதன் மூலம் பால் உற்பத்திக் குறைவையும், சினைப்பிடிக்காத பிரச்சனைகளையும் தவிர்க்கலாம்.

**6. ஆடு மற்றும் செம்மறி ஆடுகளின் மேலாண்மை**

- வறண்ட நிலப்பகுதிகளில் மேய்ச்சல் நிலங்கள் காய்ந்து விடுவதால் ஆடுகள் **நீண்ட தூரம் அலைவதைத் தவிர்க்க** வேண்டும்.
- **அகத்தி, சூபாபூல், வேம்பு மற்றும் கருவேல** மரத்தழைகளைப் வெட்டித் தீவனமாகக் கொடுக்கலாம்.
- பருவமழை தொடங்கும் முன் **குடற்புழு நீக்கம்** செய்து ஒட்டுண்ணித் தொல்லையிலிருந்து காக்க வேண்டும்.

**7. நாட்டுக்கோழி மற்றும் இதர வளர்ப்புப் பறவைகள் பராமரிப்பு**

- கோழிகளுக்கு வியர்வைச் சுரப்பிகள் இல்லாததால் மூச்சு வாங்குதல் மற்றும் திடீர் இறப்புகள் ஏற்படலாம்.

- **காற்றோட்டமான கூரைகள் மற்றும் வைட்டமின் 'சி'** கலந்த குடிநீர் கொடுக்க வேண்டும்.

- ஈரப்பதம் மற்றும் வெப்பம் சேர்வதால் ஈக்கள் (*Musca domestica*) மற்றும் காக்சீடியா நோய்த்தொற்று பரவாமல் இருக்கக் கூண்டுகளை உலர்வாகப் பராமரிக்க வேண்டும்.

அன்பான விவசாயிகளே, முன்கூட்டியே திட்டமிட்டுத் **தீவனங்களைச் சேமிப்பதும், சுத்தமான தண்ணீரைப் பராமரிப்பதும், கொட்டகைகளைக் குளிர்ச்சியாக வைத்திருப்பதும்** நமது கால்நடைகளை எல் நினோ தாக்கத்திலிருந்து பாதுகாக்கும்.

**கால்நடைகளுக்கு எந்தவொரு உடல்நலக் குறைபாடு ஏற்பட்டாலும் உடனே அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகுங்கள்.**

**எல் நினோ தாக்கத்திலிருந்து**
**கால்நடைகளைப் பாதுகாப்போம்!**

**நன்றி, வணக்கம்!**